[1980 பிப்ரவரி 5]

திருப்பாலைக்குடிக்குத் தண்ணீர் வழங்கல்.

*வினா எண். 50— திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகவை மாவட்டம், திருவாடானை தாலூகா, திருப்பாலைக்குடிக்கு ரூ. 16,000 செலவில் ஆர். எஸ். மங்கலம் பாண்டியன் கிணற்றிலிருந்து சப்ளை 20–12–1978 ல் விடப்பட்டு மீண்டும் 24–12–1978 தேதி நிறுத்தப்பட்டதா?

(ஆ) மீண்டும் தண்ணீர் விட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) உடைந்து போயிருந்த பைப்லைனின் பகுதி பழுது பார்க்கப்பட்டு 24–7–79-ம் தேதியிலிருந்து தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் திருவாடானை தாலூகாவில் 20–12–78 ல் அன்று விடப்பட்டு 24–12–78 அன்று நிறுத்தியதற்குக் காரணம் என்ன? எதன் மூலம் மீண்டும் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் மூலக் கேள்வியின் பதிலிலே குறிப்பிட்டதுபோல மங்கலம் கிராமத்திற்குப் பக்கத்தில் பைப்லைன் உடைந்து போய் இருந்தது என்றும் அது பழுது பார்க்கப்பட்டு திருப்பாலைக் குடிக்குத் தண்ணீர் விடப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

சிவகாசி நகரைச் சுற்றி புதிய தொழிற்சாலைகள்.

*வினா எண் 51 — திரு. கோ. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி நகரைச் சுற்றி 5 கிலோமீட்டர் வரை தொழிற்சாலை விஸ்தரிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் இதனால் சுற்றுப்புற கிராமங்கள் பாதிக்கப் பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(இ) இந்த விதிகளைத் தளர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

1980 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சிவகாசி நகராட்சி எல்லையிலிருந்து 5 கிலோமீட்டர் வட்டாரத்திற்குள் புதிதாக தீப்பெட்டி மற்றும் வாண வெடி தொழிற்சாலைகள் நிறுவ உரிமங்கள் வழங்கப்படக் கூடாது என இராமநாதபுரம் ஆட்சியருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிவகாசி நகரத்தை ஒட்டி 5 கிலோ மீட்டர் தூரத்துக்குள்ளே கிராமங்களிலே புதிதாக விவசாயம் கட்டுபடியாகவில்லை என்று பல பேர்கள் தீப்பெட்டி தொழிலை அமைக்க உரிமங்கள் கேட்டு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா. சிறுசிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிப்பதற்குப் பதிலாக அந்த நகரத்தை ஒட்டி அல்லது அந்த நகரத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தடைபோடுவதை மறுபரிசீலனை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமம் வழங்கி சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, திரு. ஹர்பான்சிங் அவர்களின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு தீப்பெட்டி, வாணவெடி மற்றும் அச்சகங்கள் ஆகிய தொழிற்சாலை உரிமையாளர்களின் தலைவர்கள், செயலாளர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் கூட்டினார். சிவகாசியில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால்தான் புதிய தீப்பெட்டி, வாணவெடித் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டை செயல்படுத்துவதில், முதல் கட்டமாக சிவகாசி நகராட்சி எல்லையிலிருந்து 5 கிலோ மீட்டர் வட்டாரத்திற்குள் மேற்கொண்ட தொழிற்சாலைகள் புதிதாக நிறுவப்படுவதற்கு அனுமதி வழங்கப்படல் கூடாது என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டது

எனவே எல்லோரையும் கலந்துதான் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலே தான் உரிமம் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் கிராம மக்களுக்கு வேலை கிடைக்காத நிலை இல்லை. ஏற்கனவே சிவகாசியில் இயங்கி வருகின்ற தீப்பெட்டி, வாணவெடி தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் சிவகாசியில் கிடைப்பதில்லை. அண்டை ஊர்களில் இருந்து சிறுவர்களை வண்டிகளில் ஏற்றிச் செல்வது அன்றாட வழக்கமாக இருக்கிறது. இப்படி சிவகாசியை விட்டுத்தள்ளி தொழிற்சாலைகளை அமைப்பதால் சிவகாசியில் நெரிசல் குறையும், கிராமப்புற வளர்ச்சிக்கு வகை செய்யும்.

1980 பிப்ரவரி 5]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடிய பதிலில் முரண்பாடு இருக்கிறது என்று தெரியும். நெரிசல் குறைய வேண்டும் என்று சொன்னால் கிராமங்களிலே அந்தத் தொழில்களை அமைத்தால்தான் அந்தந்த கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தர முடியும். பஸ்ஸின் மூலம் கொண்டு வரும்போது நடந்த விபத்துக்கள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, ஆங்காங்கே சிறு சிறு தொழில்களை அமைத்து பரவலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உரிமங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இப்போது தொழில் வைத்திருக்கக் கூடியவர்கள் தங்கள் தொழில் பாதிக்கப்படும் என்பதற்காக, புதிதாக லைசென்சு கொடுக்கக் கூடாது என்று சொல்லுவதாகத் தெரிகிறது. எனவே, சிறுசிறு தொழில்களுக்கு அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, 5 கிலோ மீட்டருக்குள் கொடுக்கக் கூடாது என சொல்லும் போது, 5 கிலோ மீட்டருக்கு வெளியே கொடுக்கலாம் என்பதால், அப்படிக் கொடுக்கிறபோது, சுற்றுப்புறங்களில் புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கே சிவகாசியை ஒட்டி நிறுவ முடியும். அதனால் 5 கிலோ மீட்டருக்கு வெளியே இருக்கும் சுற்றுப்புறங்கள் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அர்பான்சிங் கமிட்டியின் பரிந்துரைகள் என்னென்ன? அவற்றில் எந்தெந்த பரிந்துரைகள் இப்போது அமலாக்கப்பட்டு இருக்கின்றன. அதில் குறிப்பாக சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்ற பரிந்துரை அமலாக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அர்பான்சிங் கமிட்டியின் பரிந்துரைகளை அரசு கூடி ஒரு முடிவு எடுத்து இருக்கிறது. அவைகள் என்னென்ன என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

மேச்சேரி ஒன்றியத்திற்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண். 52—திரு. ரா. நாராயணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?